# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2275 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

### பதவிகள் - வெற்றிடம்

**கவனிக்க.- 2022.04.01 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட பதவிகள் - வெற்றிடம் எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

**பல்கலைக்கழக வைத்தியசாலை**

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்**

**வெற்றிடங்கள்**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(முழு நேர நிரந்தர அடிப்படை)

1. **வைத்திய அதிகாரி - தரம் I**

**தகைமைகள்:**

i. வைத்திய அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவை உடைய மருத்துவ அதிகாரி ;

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் "தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள் மற்றும் மகப்பேற்று இல்லங்கள்" என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஆறு (06) வருடகால அனுபவம் ;

அத்துடன்

iii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய இல.1883/17 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்படிப்புத் தகைமை ;

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MO 1-1 ரூபா (58,675.00 - 3 × 1,375 – 7× 1385 - 2 × 1,910 - 10 × 2,270 – 99,015.00)

* தரம் I வைத்திய நிபுணர்கள் MO 1-1 ரூபா 78,585.00 இன் 14 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

2. **பல் மருத்துவ அதிகாரி - தரம் I**

**தகைமைகள்:**

i. பல் மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய பல் மருத்துவ அதிகாரி ;

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் "தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள் " என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஒன்பது (09) வருடகால அனுபவம் ;

அத்துடன்

iii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய இல. 1883/17 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்படிப்பு தகைமை ;

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MO 1-1 ரூபா (58,675.00 - 3 × 1,375 – 7× 1385 - 2 × 1,910 - 10 × 2,270 – 99,015.00)

* தரம் I பல் வைத்திய நிபுணர்கள் MO 1-1 ரூபா 78,585.00 இன் 14 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

3. **வைத்திய அதிகாரி - தரம் II**

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதன் பொருட்டு இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரியாக இருத்தல் ;

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் " தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள் மற்றும் மகப்பேற்று இல்லங்கள் " என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரியாக குறைந்தது இரு (02) வருட கால அனுபவம் ;

அத்துடன்

iii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MO 1-1 ரூபா (58,675.00 - 3 × 1,375 – 7× 1,385 - 2 × 1,910 - 10 × 2,270 – 99,015.00)

* தரம் II வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 64,185.00 இன் 5 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

4. **பல் வைத்திய அதிகாரி - தரம் II**

**தகைமைகள்:**

i. பல் மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய பல் மருத்துவ அதிகாரி ;

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MO 1-1 ரூபா (58,675.00 - 3 × 1,375 – 7× 1,385 - 2 × 1,910 - 10 × 2,270 – 99,015.00)

* தரம் II பல் வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 58,675.00 இன் 1 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

5. **வைத்திய அதிகாரி - ஆரம்பத் தரம்**

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரி ;

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**வயதெல்லை:**
25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MO 1-1 ரூபா (58,675.00 - 3 × 1,375 – 7× 1,385 - 2 × 1,910 - 10 × 2,270 – 99,015.00)
* ஆரம்பத்தர வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 60,050.00 இன் 2 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

**6. துணை மருத்துவ சேவை - விசேட தரம்**
- கதிரியக்கவியளாலர் (நோயறிதல்)
- கதிரியக்கவியளாலர் (சிகிச்சை)
- மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர்
- இயன் மருத்துவ சிகிச்சையாளர்
- மருந்தாளர்
- கண்தொழிநுட்ப வல்லுநர்

**தகைமைகள்:**

i. தரம் I சேவை வகுதிக்குள் ஆகக் குறைந்தது பத்து (10) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்;

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றியிருப்பின், அனைத்து வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளிலும் சித்தி எய்தியிருப்பதுடன் பத்து (10) சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MT 8 ரூபா (50,970.00 - 10 × 1,385 - 8 × 1,910 - 80,100.00 )

* விசேட தர துணை மருத்துவர்கள் MT 8 - ரூபா 53,740.00 இன் 3 ஆம் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**7. செவிலி - தாதிய உத்தியோகத்தர் விசேட தரம் (Matron)**

**தகைமைகள்:**

i. விசேட தரமுடைய தாதிய உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

ii. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித்தலும் மேற்பார்வையும்/பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/ உளச்சிகிச்சை அடங்கலாக தாதியர் கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தினால்/ அடிப்படை தாதியர் பின்படிப்புப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வருட டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அத்துடன் தரம் I தாதிய உத்தியோகத்தராக (வைத்தியசாலை சேவை, கல்வி, பொதுச்சுகாதாரம்) 05 வருட காலம் சேவையாற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

iii. 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

iv. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான 05 வருட அண்மித்த காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றியிருத்தல் ;

அத்துடன்

v. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருட காலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MT - 8 ரூபா (50,970.00 – 10×1,385- 8 × 1,910 – 80,100.00)

* செவிலிகள் (விசேட தரம்) MT - 8 ரூபா 55,125.00 இன் 4 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

**8. தாதிய சகோதரி** (Nursing Sister)

**தகைமைகள்:**

i. தரம் 1 இனைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

ii. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித்தலும் மேற்பார்வையும்/பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/தாதியல் உளச்சுகாதாரம் அடங்கலாக தேசிய தாதியர் பயிற்சிப் பாடசாலையால் அல்லது பின்படிப்பு ஆரம்ப தாதியர் பயிற்சிப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வருட டிப்ளோமாவைப் பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

iii. 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

iv. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான அண்மித்த 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றியிருத்தல் ;

அத்துடன்

v. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருட காலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை:** 25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MT - 7 ரூபா 33,295.00- 10× 445 - 11 × 660 - 10 × 730 – 5× 750 – 59,805.00 )
* செவிலிகள் (விசேட தரம்) MT - 7 ரூபா 45,735.00 இன் 23 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

**9. தாதிய உத்தியோகத்தர்** (Nursing Officer)

**தகைமைகள்:**

i. தாதியல் BSc பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது சுகாதார அமைச்சிலிருந்து தாதியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

அத்துடன்

ii. க.பொ.த (உ./ த.) உயிரியல் அல்லது கணிதம் அல்லது விவசாய பாடத்துறையில் (பொது அறிவு பரீட்சை உள்ளடங்காமல்) அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி எய்தியிருத்தல் அல்லது குறிப்பிட்ட துறைகளில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி எய்யிதியிருத்தல்;

அத்துடன்

iii. க.பொ.த (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ்மொழி பாடங்களில் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை:**22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: MT - 7 ரூபா 33,295.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 5× 750- 59,805.00 )

* தாதி உத்தியோகத்தர் MT - 7 , ரூபா 33,295.00 இன் 1 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

10. **மருந்தாளர்** (Pharmacist)

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன், (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

ii. க.பொ.த (உ./த.) இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல், அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்தியிருத்தல் ;

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மருந்தியல்/விஞ்ஞானம் (மருந்தியல்) பட்டம்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் மருந்தாக்கவியல் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. a. மருந்தாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் மருந்தாளராக பணியாற்று வதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :** MT – 6 (ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 59,360.00)

* மருந்தாளர்கள் MT 6 ரூபா 32,850.00 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

11. **கதிரியக்கவியலாளர் (சிகிச்சை)** (Radiographer -Therapist)

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் அடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ./த.) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக ஒரே அமர்வில் சித்தி எய்தியிருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து கதிரியக்க சிகிச்சை/கதிரியக்கவியல் சிகிச்சை பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கதிரியக்கவியலாளர் சிகிச்சை தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. a. கதிரியக்கவியலாளர் சிகிச்சையாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் கதிரியக்கவியலாளராக சிகிச்சையாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :** MT - 6 (ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10× 750 - ரூபா 59,360.00 )

* கதிரியக்கவியலாளர் சிகிச்சை MT 6 ரூபா 32,850.00 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

12. **கதிரியக்கவியலாளர் (நோயறிதல்) (Radiographer - Diagnosis)**

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்கள் அடங்கலாக நான்கு (04) திறமைச்சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ./த.) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து கதிரியக்க நோயறிதல்/கதிரியக்கவியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கதிரியக்கம் நோயறிதல் தொடர்பான இரு வருட டிப்ளோமா பாட நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iv. a. கதிரியக்கவியலாளராக (நோயறிதல்) பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் கதிரியக்கவியலாளராக (நோயறிதல்) பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT - 6 ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10× 750 – ரூபா 59,360.00 )

* கதிரியக்கவியலாளர் நோயறிதல் MT 6 - ரூபா 32,850.00 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**13. மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் (Medical Laboratory Technician)**

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் அடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்தியிருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. a. மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் ஆக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MT - 6 ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10×750 ரூபா 59,360.00)

* மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் MT 6 - ரூபா 32,850.00 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**14. இயன் மருத்துவ சிகிச்சையாளர் (Physiotherapist)**

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் அடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்தியிருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து இயன் மருத்துவ சிகிச்சையாளர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் இயன் மருத்துவ சிகிச்சையாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. a. இயன் மருத்துவ சிகிச்சையாளர் ஆக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் இயன் மருத்துவ சிகிச்சையாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT - 6 ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10× 750 – ரூபா 59,360.00 )

* இயன் மருத்துவ சிகிச்சையாளர் MT 6 - ரூபா 32,850.00 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**15. தொழில்சார் சிகிச்சையாளர் (Occupational Therapist)**

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் அடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து தொழில்சார் சிகிச்சையாளர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் தொழில்சார் சிகிச்சையாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. a. தொழில்சார் சிகிச்சையாளர் ஆக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் தொழில்சார் சிகிச்சையாளர் ஆக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT - 6 (ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10× 750 - ரூபா 59,360.00)

* தொழில்சார் சிகிச்சையாளர் MT 6 - ரூபா 32,850.00 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**16. பல் சிகிச்சை தொழிநுட்பவியலாளர் (Dental Technician)**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்கள் அத்துடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் ஆங்கிலம் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் பல் சிகிச்சை தொழிநுட்பவியலாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** MT - 6 (ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10 × 750 – ரூபா 59,360.00)

* பல் சிகிச்சை தொழிநுட்பவியலாளர் MT 6 - ரூபா 32,850 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**17. கண் மருத்துவ தொழிநுட்பவியலாளர் (Ophthalmic Technologist)**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்கள் அத்துடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் ஆங்கிலம் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கண் மருத்துவ தொழிநுட்பவியலாளர் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல வேண்டும்.

அத்துடன்

iv. a. கண் மருத்துவ தொழிநுட்பவியலாளராக இலங்கையில் பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டு பட்டத்தைப் பெற்றிருப்பின் இலங்கையில் கண் மருத்துவ தொழிநுட்பவியலாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT - 6 (ரூபா 32,850.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10× 750 – ரூபா 59,360.00)

* கண் மருத்துவ தொழிநுட்பவியலாளர் MT 6 - ரூபா 32,850 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

**18. குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் (Midwife)**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் ஏனைய ஏதேனும் ஒரு பாடம் அடங்கலாக திறமைச்சித்திகளுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ./த.) உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் 1 ½ வருடங்களைக் கொண்ட குடும்ப நல சுகாதார உத்தியோகத்தருக்கான முழுநேர டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

iv. பெண்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MT - 5 (ரூபா 32,405.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 – 10× 750 – ரூபா 58,915.00)

* குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் MT 5 - ரூபா 32,405 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

19. **ஆய்வக உதவியாளர் (Lab Assistant)**

**தகைமைகள்:**

i. பதவியின் பங்கு தொடர்பான பாடத்தில் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப /தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகுதி (NVQ 2 ) இரண்டாம் நிலை சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன்

ii. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாதவாறு மூன்று (03) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** PL 2 (ரூபா 25,750.00 – 10×270- 10× 300 - 10× 330 - 12× 350 – ரூபா 38,950.00)

* ஆய்வக உதவியாளர்கள் PL 2 ரூபா 25,750.00 இன் 1 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

20. **சமையலாளர் (Cook)**

**தகைமைகள்:**

i. பதவியின் பங்கு தொடர்பான பாடத்தில் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப /தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகுதி (NVQ 2 ) இரண்டாம் நிலை சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** PL 2 (ரூபா 25,750.00 – 10×270 - 10× 300 - 10× 330 - 12× 350 – ரூபா 38,950.00)

* சமையலாளர் PL 2 ரூபா 25,750.00 இன் 1 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

21. **பல் சிகிச்சை உதவியாளர் (Dental Assistant)**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாதவாறு மூன்று (03) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. பதவியின் பங்கு தொடர்பான பாடத்தில் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கபட்ட தேசிய தொழில் தகுதி (NVQ 2 ) இரண்டாம்/மூன்றாம் நிலை சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன்

iii. ஆக குறைந்தது 01 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** PL 2 (ரூபா 25,750.00 – 10 × 270 - 10 × 300 - 10 × 330 - 12 × 350 – ரூபா 38,950.00)

* பல் சிகிச்சை உதவியாளர் PL 2 ரூபா 25,750.00 இன் 1 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

22. **குருதி வடிப்பு மருத்துவர் (Phlebotomist)**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாதவாறு மூன்று (03) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. அங்கீகரிக்கப்பட்ட அரசு அல்லது தனியார் மருத்துவனை நிறுவனத்தால் குருதி வடிப்பு மருத்துவர் (வெனஸ் டிசெக்டர்) பயிற்சி பெற்றதற்கான சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

iii. பதவியின் பங்கு தொடர்பான பாடத்தில் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகுதி (NVQ 2) இரண்டாம்/மூன்றாம் நிலை சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** PL 2 (ரூபா 25,750.00 - 10 × 270 - 10 × 300 - 10 × 330 - 12 × 350 – ரூபா 38,950.00)

* குருதி வடிப்பு மருத்துவர் PL 2 ரூபா 25,750 இன் 1 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

23. **உதவியாளர் (Attendant)**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாதவாறு மூன்று (03) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** PL 2 (ரூபா 25,750.00 – 10×270 - 10× 300 - 10× 330 - 12× 350 – ரூபா 38,950.00)

* உதவியாளர் PL 2 ரூபா 25,750 இன் 1 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

24. **தூதுவர் /அலுவலக பணியாளர் (Messenger Com/Office Labourer)**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாதவாறு மூன்று (03) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** PL 2 (ரூபா 25,750.00 – 10 × 270 - 10 × 300 - 10 × 330 - 12 × 350 – ரூபா 38,950.00)

* தூதுவர் / அலுவலக பணியாளர் PL 2 ரூபா 25,750.00 இன் 1 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**பொது நிபந்தனைகள்:**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

ii. பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் அத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

iii. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும் ;

iv. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

v. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்ப தர – மருத்துவ துறை சாராத உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய விசேட தரப்பதவிகள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவ நிபுணர், மருத்துவ அதிகாரி தரம் I, பல்மருத்துவ அதிகாரி தரம் I, மருத்துவ அதிகாரி தரம் II, பல்மருத்துவ அதிகாரி தரம் II ஆகியோர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் ;

vi. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10% பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் பல்கலைக்கழகத்தினால் 15 % உம், 03% ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) பல்கலைக் கழகத்தினால் பங்களிப்புச் செய்யப்படும் ;

vii. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்லாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர" என்ற முகவரிக்கு 2022.04.18 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் ;

viii. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது ;

ix. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற் கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் ;

x. விண்ணப்பம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.kdu.ac.lk

ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வுபெற்ற),
டப்ப்வ் ஆர்டப்ரீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ
என்டீசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

04-139/1

---

**பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்**

பயிற்சி கண் தொழில்நுட்ப நிபுணர்/ECG பதிவாளர் மற்றும்
EEG/EMG பதிவாளர்
(மணிநேர கட்டண அடிப்படையில்)

1. **பயிற்சி கண் தொழில்நுட்ப நிபுணர்**

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ்மொழி மற்றும் ஏதேனும் ஒரு பாடம் அடங்களாக நான்கு (04) திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ.த.) பரீட்சையில் ஒரு அமர்வுக்கு மேற்படாமல் "பௌதீகவியல்" பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த உயிரியல், இரசாயனவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரண்டு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 25.02.2016 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 அட்டவணை V இன் படி சம்பளம் வழங்கப்பட வேண்டும். (மாதத்திற்கு ரூபா 25,790.00 )

2. **பயிற்சி ECG பதிவாளர்**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் குறைந்தபட்சம் ஆங்கிலத்துடன் இணைந்த கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ்மொழி மற்றும் ஏதேனும் ஒரு பாடம் அடங்களாக நான்கு (04) திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரு அமர்வுக்கு மேற்படாமல் "உயிரியல்" பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 25.02.2016 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 அட்டவணை V இன் படி சம்பளம் வழங்கப்பட வேண்டும். (மாதத்திற்கு ரூபா 25,790.00 )

3. **பயிற்சி EEG/EMG பதிவாளர்**

**தகைமைகள்:**

i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் குறைந்தபட்சம் ஆங்கிலத்துடன் இணைந்த கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ்மொழி மற்றும் ஏதேனும் ஒரு பாடம் அடங்களாக நான்கு (04) திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரு அமர்வுக்கு மேற்படாமல் "உயிரியல்" பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 25.02.2016 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 அட்டவணை V இன் படி சம்பளம் வழங்கப்பட வேண்டும். (மாதத்திற்கு ரூபா 25,790.00)

**பொது நிபந்தனைகள்:**

i. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர" என்ற முகவரிக்கு 18.04.2022க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் ;

ii. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது ;

iii. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பம் மற்றும் ஏனைய தகவல்களை www.kdu.ac.lk வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

04-139/2

---

**கவனிக்க.- 2022.04.01 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட பதவிகள் - வெற்றிடம் எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

**நீதிச் சேவை ஆணைக்குழு**

வயோதிபர் உரிமைகளை பாதுகாப்பதற்கான பராமரிப்புச் சபையின் அங்கத்தவர்களை நியமித்தல் - 2022

2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க முதியோரின் உரிமைகளை பாதுகாக்கும் (திருத்தம்) சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டுள்ள 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோரின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கு அமைவாக, 03 வருட காலப்பகுதிக்கு பராமரிப்புச் சபையொன்றை ஸ்தாபிப்பதற்காக கீழ்வரும் துறைகளில் அறிவும் அனுபவமும் கொண்ட தேர்ச்சியுடைய, நம்பிக்கையுள்ள, நன்னடத்தை மற்றும் சிறந்த தேக ஆரோக்கியமுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

1. சட்டம்
2. முகாமைத்துவம்
3. மனித உரிமைகள்
4. சமூக சேவைகள்
5. மருத்துவம் அல்லது ஆலோசனை செய்தல்.

சகல விண்ணப்பப்படிங்களும் 2022.05.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பராமரிப்புச் சபைக்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்களுக்கு கீழ்வருமாறு கொடுப்பனவு வழங்கப்படும்.

1. தலைவர்
   சகல கொடுப்பனவுகளும் உள்ளடங்கிய மாதாந்தக் கொடுப்பனவு
   - ரூபா 35,000.00
2. அங்கத்தவர்களுக்கு
   அதிகபட்சமாக 05 நாட்களுக்கு உட்பட்டு நாளொன்றுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவு
   - ரூபா 5,000.00

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2022, மார்ச் 31.

4-147

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாயத் திணைக்களம்**

விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக இலங்கை விவசாயப் பாடசாலைகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2022

**Open competitive Examination for the enrolment of students for the National Diploma in Agricultural Production Technology in Sri Lanka School of Agriculture - 2022**

விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த இலங்கை விவசாயப் பாடசாலைகளில் நடைபெறும் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக 2021 / 2022 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் பரீட்சை பிரிவினால் 2022, யூன் மாதத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சில பிரதான நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**02. விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறி**

2.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக் கற்கைநெறிக்கு தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ 5) மட்டம் 5 வழங்கப்படுகின்றது.

2.2 இக் கற்கைநெறியானது விவசாயத் திணைக்களத்தின் அநுராதபுரம், பிபிலை, லபுதுவை, பாலமுனை, பரந்தன், வாரியபொல ஆகிய விவசாயப் பாடசாலைகளில் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவான கற்கைநெறியாக மேற்கொள்ளப்படுகின்றது.

2.3 இக்கற்கை நெறிக்கான காலம் 1 ½ வருடங்களாகும். இதில் ஒரு வருடம் விவசாயப் பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்திட்டத்திற்கமைய பயிற்சி வழங்கப்படும். மேலும் தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையின் (NAITA) மேற்பார்வையின் கீழ் 06 மாத காலத்திற்கு தொழில் சார் பயிற்சி ஒன்றினை குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

2.4 ஆங்கில மொழியில் மட்டும் நடத்தப்படும் இக்கற்கை நெறியானது முழு நேர உள்ளகக் கற்கைநெறியாகும்.

2.5 மாணவர் சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கற்கைநெறியினை பயில்வதற்கு தகைமை பெற்றவர்களின் தகைமைகளின் உண்மை நிலை நேர்முகப் பரீட்சை மூலம் பரீட்சிப்பதன் மூலம் விவசாயப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்கள்.

2.6 இக்கற்கை நெறிக்கு க.பொ.த. (உயர் தர) தகைமையின் அடிப்படையிலும் குறிப்பிட்ட பிரிவில் தேசிய தொழிற் தகைமை நிலை 04 (NVQ level 04) கற்கை நெறியினை பயின்று பெற்றுக் கொண்ட தகைமையின் அடிப்படையிலும் விண்ணப்பிக்கலாம்.

**03. கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

**3.1 க.பொ.த. (உயர் தர) தகைமையின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு**

3.1.1 *கல்வித் தகைமைகள்*

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் உயிரியல், இரசாயனவியல் பௌதீகவியல் /விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஆகக்குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த. உயர் தர பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம்/பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகியவற்றில் மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**முக்கியம்** - க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல் துறை மற்றும் தொழில்நுட்பவியல் துறை ஆகிய பிரிவுகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களின் சேர்க்கைகளும் தவிர்ந்த வேறேதும் பாடமொன்றினை கல்வி பயின்றிருந்தால் தகைமையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3.1.2 *வயது*

விண்ணப்பதாரிகள் 2022.05.08 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 27 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2004.05.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1995.05.08 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.2 விவசாயத் துறையில் தேசிய தொழில் சார் தகைமை மட்டம் 4 (NVQ Level 4) பாடநெறி ஒன்றினை பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு :-

3.2.1 *கல்வித் தகைமைகள்*

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 (NVQ 4) இல் கீழே தரப்பட்டுள்ள பாடநெறியொன்றை பயின்று மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ 4) சான்றிதழினை பெற்றிருத்தல்

* நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
* வெளிக்கள உதவியாளர் (விவசாயம்)
* நில அலங்கார வினைஞர்
* நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்

அல்லது

விவசாயத் துறையுடன் தொடர்பான விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை 04 (NVQ 4) இல் வேறு ஏதேனும் பாடநெறி ஒன்று

3.2.2 *வயது*

விண்ணப்பதாரிகள் 2022.05.08 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2004.05.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1987.05.08 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.3 இக்கற்கைநெறியானது விவசாயச் செயற்பாடுகளுடன் தொடர்பான செய்முறை பயிற்சிகளை உள்ளடக்கியது. எனவே இக் கற்கைநெறியினை கற்பதற்கு நீங்கள் உடலியல் மற்றும் மனநல ரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். கற்கை நெறியில் சேரும் தருணத்தில் கர்ப்பமாக இருந்தால் கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கும் கற்கை நெறியில் சேர்ந்த பின்னர் கர்ப்பமாவது கற்கை நெறியில் இருந்து விலக்குவதற்கும் காரணமாக அமையும்.

(இக் கற்கை நெறிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் உடல் மற்றும் உள ரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக அரச வைத்தியர் ஒருவரிடம் பெற்றுக் கொண்ட வைத்திய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.)

3.4 இக்கற்கைநெறியினை பயில்வதற்கு மதகுருமார் தகுதியுடையவராகமாட்டார்கள்.

3.5 அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

**04. பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் பரீட்சை நடைபெறும் மொழி**

4.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக இலங்கை விவசாயப் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மட்டும் நடாத்தப்படுவதுடன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

4.2 போட்டிப் பரீட்சை கீழே தரப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 2022, யூன் மாதத்தில் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் பொழுது நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விருப்பமுடைய நகரம் மற்றும் அதற்குரிய இலக்கத்தினை குறிப்பிட்ட இடத்தில் பதிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

| *நகர இல.* | *நகரம்* |
|---|---|
| 1 | அம்பாறை |
| 2 | அநுராதபுரம் |
| 3 | தம்புள்ளை |
| 4 | கம்பஹா |
| 5 | காலி |
| 6 | அம்பாந்தோட்டை |
| 7 | கண்டி |
| 8 | குருநாகல் |
| 9 | வவுனியா |

4.3 குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றிக்கு போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து அல்லது வேறு ஏதேனும் செயன்முறை பிரச்சினைகள் ஏற்படுமாயின்

பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ள பரீட்சை நிலையத்திற்கு பதிலாக வேறு பரீட்சை நிலையம் விவசாயத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும்.

05. **விண்ணப்பப்படிவங்கள் கோரல்**

5.1 இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம் நிகழ்நிலை (Online) முறை மூலம் மேற்கொள்ளப்படும். விவசாயத் திணைக்களத்தின் w.w.w.doa.gov.lk என்ற இணையத்தளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

5.2 பரீட்சைக்கான கட்டணம் ரூபா 750.00 ஆகும். மக்கள் வங்கி பேராதனை கிளையில் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 57100179027204 கொண்ட கணக்கிற்கு பரீட்சை கட்டணத்தை செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பற்றுச் சீட்டு வழங்கப்பட்ட திகதி, கிளை மற்றும் இலக்கம் விண்ணப்பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

5.3 விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் தொடர்பான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் 081-2388340 அல்லது 081- 388341 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளவும்.

5.4 பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கவோ, வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றி அமைக்கவோ முடியாது.

5.5 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளான 2022.05.08 தினத்தின் பின்னர் விண்ணப்பப்படிவம் இணையத் தளத்திலிருந்து அகற்றப்படும்.

5.6 நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்பத்திரத்தின் கடின நகல் (Hard copy) பெற்றுக் கொள்ளல் கட்டாயமாகும்.

5.7 விண்ணப்பத்தின் கடின நகல் (Hard copy) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளுடன் கட்டாயமாக பதிவுத் தபாலில் 2022.05.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் (விரிவாக்கற் பயிற்சி) விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய டிப்ளோமா கற்கை நெறி (NVQ-5)" எனக் குறிப்பிடல் வேண்டும்.

**இணைப்பு**

அ. க.பொ.த. (உயர் தர) தகைமைகளின் அடிப்படையிலான விண்ணப்பதாரிகளுக்கு

i. க.பொ.த. (சாதாரண) பரீட்சை சான்றிதழின் பிரதி
ii. க.பொ.த. (உயர்தர) பரீட்சை சான்றிதழின் பிரதி
iii. பிறப்புச் சான்றிதழின் பிரதி
iv. தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி
v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

ஆ. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) பாடநெறியினை நிறைவு செய்து சான்றிதழ் பெற்றவர்களுக்கு

i. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை சான்றிதழ்
ii. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) சான்றிதழ்
iii. பிறப்புச் சான்றிதழ் பிரதி
iv. தேசிய ஆளடையாள அட்டை பிரதி
v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

குறிப்பிட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாகும் அல்லது காணாமல் போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

5.8 விண்ணப்பப்படிவங்களின் கடின நகல் விவசாயத் திணைக்களத்திற்கு கிடைக்காமை பரீட்சை எழுதுவதற்கான தகுதியை இழந்ததாகக் கருதப்படும். எனவே குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட படிவத்தினை அனுப்பி வைக்க வேண்டும். மேலும் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய சிட்டை ஆகியவற்றின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும்.

6. **அடையாளத்தை உறுதி செய்தல்**

6.1 பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் அவர்கள் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை மட்டும் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

7. **கோவிட் - 19 தொற்றை தவிர்க்கும் செயன்முறை**

7.1 பரீட்சை நிலையத்திற்குள் உட்பிரவேசித்ததில் இருந்து பரீட்சை நிறைவு பெறும்வரை கோவிட் தொற்றிலிருந்து பாதுகாக்கப்படும் வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

8. **பரீட்சை முறைமை**

8.1 போட்டிப் பரீட்சை விவசாயம் மற்றும் விவேகப் பரீட்சை என்பன முறையே 01 மணித்தியாலம் என்ற வகையில் நடைபெறுவதுடன், ஒவ்வொரு விடயத்திற்கும் 100 மதிப்பெண்கள் என்ற வகையில் வழங்கப்பட்டு இறுதி மதிப்பெண்ணாக 200 இற்கு பெறப்பட்ட மதிப்பெண்கள் அறிவிக்கப்படும்.

8.2 ஒவ்வொரு விடயத்திலும் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 30% மதிப்பெண்கள் பெற வேண்டும்.

8.3 **பாடவிதானம்:**
விவசாயம்: க.பொ.த. (சாதாரண தரம்) விவசாயப் பாடத்திற்கமைவாகவும் விவசாயத் துறையுடன் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாகவும் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**விவேகப் பரீட்சை**

இவ்வினாப்பத்திரமானது ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல், ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடும் விதத்தில் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் 50 இனை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு உட்பட '5.7' இல் குறிப்பிடப்பட்ட இணைப்புகளுடன் சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். அது தொடர்பாக குறுஞ் செய்தி மூலம், விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவின் மூலம் அறிவிக்கப்படும்.

பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் அது தொடர்பான விபரங்களை 081-2388085 அல்லது 081-2388059 என்ற இலக்கம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

8.5 விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளும் வழிகளான ஈமெயில் முகவரி, Whatsapp இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை ஆட்சேர்ப்பு நடவடிக்கை நிறைவு பெறும்வரை மாற்றாமல் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க வேண்டும். அந்த இலக்கங்களை மாற்றுவதன் மூலம் ஏற்படும் சங்கடங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது.

8.6 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஒருவரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தளம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதப்போதகர் ஒருவரினால் உறுதிப்படுத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.7 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.8 பரீட்சையினை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். அத்துடன் இச்சட்டத் திட்டங்களை மீறும் விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

8.9 போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் விவசாயத் திணைக்கள இணையத் தளத்தில் வெளியிடப்படும் இம்மதிப்பெண்களின் அடிப்படையில் மற்றும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமையும் மற்றைய தகைமைகளும் பரீட்சிக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு எதுவித மதிப்பெண்களும் வழங்கப்பட மாட்டாது. விவசாயப் பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையான மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

8.10 பரீட்சார்த்தியொருவருக்கு இவ் எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளித்தல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுதல் போன்றவற்றின் காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இவ்வறிவித்தலுக்கு அமைவாக தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால் அவரின் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்படும்.

8.11 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

09. **தெரிவு செய்யப்படும் முறை**

9.1 இப் பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் 90% க.பொ.த (உயர் தர) தகைமைகளின் அடிப்படையிலும் 10% தேசிய தொழிற் தகைமை 4 (NVQ level 4) தகைமையின் அடிப்படையிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

9.2 குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயப் பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படும் ஆண், பெண் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆண், பெண் விடுதிகளில் உள்ள இடவசதி மற்றும் அப்பாடசாலைகளில் கற்கை நெறிக்கான வசதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். எனவே மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் மதிப்பெண் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே மாறுப்படக்கூடும்.

10. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் காணப்படுகின்றது என கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எஸ். எச். எஸ். எ. த சில்வா,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம், பேராதனை,
2022, மாச்சு 24.

4-111

---

**இலங்கைப் பரீட்சைத்திணைக்களம்**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை -2019 (2022)

இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு 3 இன் கீழ் குறித்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தலுக்காகத் தகைமை பெற்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | லிதோ ஓவ்செட் பதிப்பவர் மற்றும் இயந்திர இயக்குநர் | 14 |
| 02 | எழுத்து அச்சக இயந்திர இயக்குநர் | 03 |
| 03 | அச்சுப்பதிப்பு முன் திட்டமிடுபவர் | 01 |
| 04 | கணினி தட்டச்சு மற்றும் அச்சகக் கோலம் வரைபவர் | 08 |
| 05 | அச்சுவேலை முடிப்பவர் | 02 |
| 06 | அச்சக தொழினுட்பவியலாளர் | 02 |

01. **ஆட்சேர்ப்பு முறை** : அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுள் பரீட்சை ஆணையாளர்நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அதன் போது பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட (05 ஆவதில் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளியிடும் திட்டத்திற்கேற்றவாறு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

02. **தகைமைகள்.-**

I. **பொதுவான தகைமைகள்**

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
- சிறந்த நன் நடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நிலையைக் கொண்டிருக்கவும் வேண்டும்.
- ஏதாவது சமயத்தலைவராக இருக்க முடியது.
- இரவு பகல் போன்ற இரு வேளைகளிலும் கடமையாற்றக்கூடியவராக இருப்பதுடன் ஆண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது கடமை விதிக்கோவை சட்டத்தில் 5 ஆவது அத்தியாயத்திற்கேற்ப அரசசேவைக்கு நியமிப்பதற்கு பொருத்தமில்லாதவராக இருத்தல் கூடாது.

- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் எல்லாவற்றையும் பூரணப்படுத்தி இருக்கவேண்டும்.

- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியன்று வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். அதற்கேற்ப 2004.04.29 ஆந் திகதி அல்லது முன்னரும் 1987.04.29 ஆந் திகதி அல்லது அதன் பின்னரோ பிறந்த ஒருவர் மட்டுமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

II. **கல்வித்தகைமை**

அ. கல்விப் பொதுத்தராதர (சாதரணதர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரண்டு (2) பாடங்களுக்கு திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறுபாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. கணினி தட்டச்சு மற்றும் அச்சுப் பதிப்பு கோலமிடுபவர் பதவிக்கு மட்டும் மேலே (அ) இல் உள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக க.பொ.த (சா.தர) பரீட்சையிலே ஆங்கில மொழிப்பாடத்தில் திறமைச்சித்தியைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

III. **தொழிற் தகைமை**

(அ) அந்த அந்தப் பதவிக்கான புலத்திற்குரிய தொழில் மற்றும் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய தொழில் தகைமையான NVQ4 மட்டம் அல்லது அந்த ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு புலத்திற்குரியதும் அதற்குச் சமமானதுமான தொழில் தகைமையைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு** : அச்சக தொழில்நுட்ப பதவிக்காக அச்சக தொழில்நுட்பம் மற்றும் /அல்லது மின் தொழில்நுட்ப புலம் ஏற்றுக் கொள்ளப்படும்.

IV. முன் அனுபவம்: புலத்திற்குரிய பதவியில் 5 வருடங்கள் சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு** : புலத்திற்குரிய பதவிக்கான அனுபவத்தைக் கொண்ட போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்ப தாரிகள் இல்லாதவிடத்து எஞ்சிய வெற்றிடத்திற்காக சேவை அனுபவம் தவிர ஏனைய தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் ஒரு வருடப் பயிற்சியின் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

V. **உடற் தகைமை.**- எல்லா விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப்பகுதியிலும் கடமையாற்றுவதற்குப் போதுமானளவு உடற்தகைமைகளையும் சிறந்த மனோநிலையையும் கொண்டவராகவும் இருக்கவேண்டும்.

**3. கடமையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகளும் கடமை நிபந்தனைகளும்**

I. இந்தப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். உங்களுக்கு ஓய்வூதிய சம்பளமுறைமை தொடர்பாக அரசினால் முன்வைக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்படவேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பளமுறைமைகளுக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் முறைகளுக்கு நீங்கள் அதற்காக பங்களிப்பு செய்யவேண்டும்.

II. இந்தப் பதவி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பதவியாகும்.

III. இந்தப் பதவியானது 03 வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை விதிக் கோவையின் 3 ஆவது உப ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 1 ஆவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

IV. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சோசலிச சனநாயகக் குடியரசின் தாபனவிதிக்கோவை, அரசநிதிப் பிரமாணம், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள், அரசினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற வேறு சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இந்நியமனம் உட்பட்டது.

V. கடமையின் தேவைக்கேற்ப இரவு, பகல் போன்ற வேளைகளிலும் கடமையாற்ற வேண்டியதுடன் வழங்கப்படும் கடமைகளுக்கேற்ப விடுமுறை நாட்களிலும் விருப்புடன் தமது கடமைகளை வழங்கத் தயாராக இருக்கவேண்டும்.

**4. சம்பளத்திட்டம்.**- இப்பதவி ரூபா 29,840.00 - 10×300-11×350-10×560-10×660-48,890.00 (MT1-2016) மாதாந்தம் சம்பளத்திட்டத்திற்கு உட்பட்டது.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளித்திட்டம் கவனத்தில் கொள்ளப்படும். இந்த நேர்முகப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறுவதுடன் விண்ணப்பித்த மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டது.

| | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்சப் புள்ளி |
|---|---|---|
| 1 | கல்வித்தகைமை | 30 |
| 2 | தொழில்தகைமை | 30 |
| 3 | உரிய துறையில் அனுபவம் | 35 |
| 4 | நேர்முகப்பரீட்சையில் காட்டும் தேர்ச்சி | 05 |
| | **மொத்தப் புள்ளி** | 100 |

மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும். பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உச்சப்புள்ளிகளின் அளவு உள்ளடக்கப்பட்டதாக புள்ளி வழங்கப்படும். அந்தப்புள்ளிகளை வழங்குவதற்கான விபரமான புள்ளித்திட்டமொன்று பரீட்சை ஆணையாளரினால் கடைப்பிடிக்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் சித்தியடைவதற்காக குறைந்தபட்சம் 40% மான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டியதுடன் உரிய பதவிகளின் தன்மைக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பின்னர் வெற்றிடத்தின் எண்ணிக்கையின் முன்று மடங்கினர் தேர்ச்சிகளை அளவிடும் தொழில் (செயன்முறை) சோதனைக்காக அனுப்பப்படுவர். தொழில் (செயன்முறை) சோதனையில் உயர்ந்த புள்ளிகளைப் பெறுபவர்களிடையே முன்னுரிமைக்கேற்ப காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**குறிப்பு :**

I. தொழில் சோதனையின் போதும் கட்டமைக்கப்பட்ட சோதனையின் போதும் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் தேர்ச்சி ஒழுங்கிற்கமைய ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

II. ஒரு வருட பயிற்சிக்கு உட்பட்டு ஆட்சேர்த்துக் கொள்ளும்போது ஒருவருட பயிற்சியின் பின்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் தொழில் சோதனையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் நிரந்தர பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

6. **பரீட்சைக் கட்டணம்** : பரீட்சைக் கட்டணம் ரூபா 250.00 ஆகும் இந்தப் பணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத்தலைப்பு 20-03-02-13 இன் கீழே 2022.04.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக நாட்டின் எந்தப்பகுதியிலும் உள்ள அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலோ மட்டும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்திலே உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டவேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எதிர் கால பயன்பாட்டிற்காக வைத்துக் கொள்க) ஒவ்வொரு பதவிகளுக்காகவும் வெவ்வேறான கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பத்தை அனுப்புதல் :**

I. விண்ணப்பங்கள் யாவும் 2022.04.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிர்வாகக் கிளை, இலங்கைப் பரீட்சைத்திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியொன்று இந்த அறிவுறுத்தலின் இறுதியிலே காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து முதற்பக்கத்தில் 01 தொடக்கம் 06 வரையிலான பந்தியினையும் எஞ்சிய பந்திகளை மற்றைய பக்கத்திலும் அமையுமாறு தயாரித்துக் கொள்ளவேண்டும். விண்ணப்பத்தின் தலைப்பிலே குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பதாரிகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பதாரிகள் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதவேண்டும்.

* உரிய மாதிரிக்கு அமையாதவையும் பூரணமற்றதான விண்ணப்பங்களும் எதுவித அறிவுறுத்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதனால் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சையின் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்ததிற்கேற்ப அமைந்துள்ளதா என்பதையும் எல்லா தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பம் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் பரிசீலித்து உறுதி செய்து கொள்ளவேண்டும்.

III. விண்ணப்பத்தை அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் ஓரத்திலே "முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் 2019 (2022)" எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

IV. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஒருவரும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை அரச பாடசாலையின் அதிபர் ஒருவர், ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவர், கோட்டத்தின் கிராம அலுவலர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பிரபல்ய நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம் மிக்க அலுவலர் ஒருவர், அரச மற்றும் மாகாண சேவையில் நிலையான பதவியிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர், பௌத்த விகாராதிபதி மகாநாயக்கர்கள் மற்றும் ஏனைய மதத்தலைவர்கள் அல்லது மதத்தலைவராகக் கருதப்படும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

V. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கேற்ப அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். விண்ணப்பம் தொலைந்துபோதல் அல்லது தாமதமாக அனுப்பப்பட்டமை என எவ்வித முறைப்பாடு களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.

**8. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல்**

I. வர்த்தமானி அறிவுறுத்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற கருதுகோளுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னராக பரீட்சைக்கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

II. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் இந்தப்பதவிக்கான தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படமாட்டாது.

III. விண்ணப்பதாரிகளுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டவுடனே உடனடியாக அது தொடர்பாக செய்தித்தாளிலே விளம்பரம் ஒன்று இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதுவிடின் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்திற்கு (நிருவாகக் கிளை பரீட்சைத் திணைக்களம்) அறிவிக்க வேண்டும். அவ்வாறு விசாரணை செய்யும் விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விலாசம் என்பவற்றை சரியாகக் குறிப்பிடவேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவர் எனின் அந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அழைப்புக் கடிதத்தின் பிரதியை விரைவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தை அறிவித்தலில் காட்டப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்து கொள்ளுதல் மிகச்சிறந்தது. அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத்திணைக்களத்தினால் விசாரணை செய்கின்ற எந்தத் தகவல்களையும் உறுதி செய்து கொள்வதற்காக தங்களிடம் உள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணத்தின் பற்றுச் சீட்டின் பிரதி, பதிவுத் தபாலின் பற்றுச் சீட்டின் பிரதி என்பவற்றை தயாரக வைத்திருத்தல் வேண்டும்.

IV. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டவர்களாவர்கள். அந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் தண்டனைக்கு உட்படுத்த வேண்டி ஏற்படும்.

9. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்** : விண்ணப்பதாரிகளினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களுள் ஒன்றை நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு முன்வைக்க வேண்டும்.

I. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
II. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் முகமாக முகம் மற்றும் தமது இரு காதுகளை மறைக்காது வருதல் வேண்டும். அவ்வாறு ஆள் அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் பரீசாத்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உள்வாங்கப்படமாட்டர்கள். மேலும் நேர்முகப்பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அலுவலகர்களுக்கு விண்ணப்பதாரிகளை இனங்கானக் கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளும் தெரியக் கூடியதாக இருக்கவேண்டும்.

**10. தவறான தகவல்களை வழங்குதல்**

ஐ. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்திலே குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதாவது தகவல் ஒன்று பொய்யாகவோ அல்லது தவறுதலாகவோ ஆட்சேர்ப்பதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பதாரதன்மை இரத்து செய்யப்படும். அதனால் பொய்யான அல்லது தவறான தகவல் ஒன்று ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அரச சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்பட்டு அரச சேவையில் இருந்து விலக்குவதற்கும் நேரிடும்.

11. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுவது தொடர்பான இறுதித் தீர்மானம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களில் மொழி தொடர்பாக ஏதாவது வித்தியாசம் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவுறுத்தலுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எல். எம். டி. தர்மசேன,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்லை,
2022, ஏப்பிறல் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை -2019 (2022)

**Recruitment to Grade III Posts of Management Assistants' Technological Segment 3 Service Category –2019 (2022)**

(இலக்கம் அல்லது குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களிலே தரப்பட்ட கூட்டினுள் தெளிவாகவும் சரியாகவும் இலக்கம் /குறியீட்டைக் குறிப்பிடுக.)

விண்ணப்பிக்கும் பதவி ☐

சிங்களம் - 2 /தமிழ் - 3 /ஆங்கிலம் - 4

☐ (அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

விண்ணப்பிக்கும் பதவி ☐

(விண்ணப்பிக்கும் பதவிக்குரிய இலக்கத்தை எழுதவும்)

| | பதவி | இலக்கம் |
|---|---|---|
| 1 | லிதோ ஓவ்செட் பதிப்பவர் மற்றும் இயந்திர இயக்குநர் | 1 |
| 2 | எழுத்து அச்சக இயந்திர இயக்குநர் | 2 |
| 3 | முன் அச்சிடல் திட்டமிடலாளர் | 3 |
| 4 | கணினி தட்டச்சு மற்றும் அச்சகக் கோலம் வரைபவர் | 4 |
| 5 | அச்சுவேலை முடிப்பவர் | 5 |
| 6 | அச்சக தொழினுட்பவியலாளர் | 6 |

1. 1.1 முழுப் பெயர்:..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.2 முதல் எழுத்து இறுதியில் வருமாறு முதல் எழுத்துக்களுடன் பெயர் :..................................................... (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..................................................... .....................................................

1.3 முழுப் பெயர்: ....................................................................................................... (தமிழில்)

2. 2.1 நிரந்தர முகவரி: ........................................................................................................
(ஆங்கிலத்தில்)

2.2 நிரந்தர முகவரி:..................................................................................... (தமிழில்)

2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்படவேண்டிய முகவரி:............................................
(ஆங்கிலத்தில்)

3. பால் : ☐ ஆண் - 0 பெண் - 1

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

6. 6.1 பிறந்த திகதி:
வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ நாள்: ☐☐

6.2 விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதியன்று வயது : (2022.04.29)

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா: ☐ விவாகமானவர் - 1 விவாகமாகாதவர் - 2

8. கல்வித்தகைமை

8.1 க.பொ.த (சாதாரணதர) பரீட்சை
பரீட்சைக்குத்தோற்றிய வருடமும் மாதமும்:............................................
பரீட்சை சுட்டெண்:...........................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9. தொழில் தகைமை

| பாடநெறி | பயின்ற வருடம் | தொழில்நுட்ப நிறுவகம் | NVQ மட்டம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

9.1 உங்களால் முன்வைக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் எந்த NVQ மட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதமொன்று கட்டமைக்கப்பட்ட நேர்முகக்குழுவிடம் ஒப்படைக்கப்படவேண்டியது கட்டாயமாகும்.

10. உரிய துறையில் பெற்றுள்ள அனுபவம்:..........................................................
11. வேறு கல்வி மற்றும் தொழில் தகைமை:.......................................................

12. நீங்கள் ஏதாவது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் தவறு இழைத்தவராக கருதப்பட்டுள்ளீரா? ஆம் எனின் அது தொடர்பாக குறிப்பிடுக :..................................................

13. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரம்
13.1 பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் :.................................................
13.2 பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் : .................................................
13.3 செலுத்திய பணம் :.................................................

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

14.1 இந்த விண்ணப்பத்திலே என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் என கௌரவமாக உறுதி செய்கிறேன். இங்கு ஏதாவது பகுதியொன்று பூரணப்படுத்தப்படாமலோ அல்லது தவறுதலாக பூரணப்படுத்தப்பட்டிருப்பின் ஏற்படும் பாதிப்பை ஏற்றுக் கொள்ள நான் சம்மதிக்கின்றேன். மேலும் இங்கு எல்லாப்பகுதிகளும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறேன்.

14.2 என்னால் வழங்கப்பட்ட ஏதாவது தகவலொன்று தவறானது என உறுதிசெய்யப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் எனவும் நியமனம் பெற்றபின்னர் சேவையில் இருந்து நீக்குவதற்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் என்பதை அறிவேன்.

14.3 மேலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

14.4 இங்கு குறிப்பிடப்படும் எந்தத் தகவலும் பின்னர் மாற்றப்படமுடியாது.

.............................
விண்ணப்பதாரியின் கையெப்பம்.

திகதி: .............................

15. விண்ணப்பதாரியின் கையெப்பத்தை உறுதிப்படுத்தல்

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................... அவர்களை நான் நன்கறிவேன எனவும், அவர் இன்று என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................................
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்).

பெயர் : ....................................................
பதவி: ....................................................
முகவரி: ....................................................
திகதி : ....................................................

16. தற்போது அரச சேவையில் இருக்கின்ற விண்ணப்பதாரிகள் மட்டும் தமது திணைக்களத் தலைவரது பின்வரும் சான்றிதழுடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................. என்பவர் இத் திணைக்களத்தில் கடமையாற்றுகிறார் எனவும் அவர்/அவள் வழங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும் இந்தப்பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் இத்திணைக்களத்திலிருந்து அவரை விடுவிக்கமுடியும் எனவும் சிபாரிசு செய்கிறேன்.

..................................................
(திணைக்கள தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்).

பெயர்: ..........................................
பதவி: ..........................................
முகவரி: ..........................................
திகதி : ..............................

04-177